## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2026 ஆம் வருடம் ஜனவரி மாதம் 05-ஆம் நாள், திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீவிசுவாவசு வருடம் மார்கழி மாதம் 21-ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.05/2025 இன் அ.வ.எண்.39/2018**

சுயம்பு நாடார் அவரது பவர் ஏஜெண்டான
திரு.கணேசன் மூலம் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

என். குழந்தைவேல் ... எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனுவானது 16.12.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.H.முகம்மது ரியாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, வா.சா.2 ஆக திரு.வசந்தராஜ் என்பவர் ஏற்கனவே அளித்த முதல் விசாரணை சாட்சியத்தை கோப்பிலிருந்து நீக்கம் செய்ய உத்தரவிட கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.08 17:23:54 +0530

1. <u>மனுவின் சுருக்கம்</u>:

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவார். அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி -2 ஆக வசந்தராஜ் என்பவர் 18.07.2025 அன்று விசாரணை செய்யப்பட்டு, 13.08.2025 ல் வா.சா.2 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக கேட்புநாள் வைக்கப்பட்டுள்ளது. வா.சா.2 உபயவாதிகள் வசித்து வரும் ஊரினை சேர்ந்தவர் என்பதால் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் பிரதிவாதியால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுமே என்று அஞ்சி குறுக்கு விசாரணை சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தின் முன் ஆஜராவதற்கு பயந்து நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வருகிறார். எனவே, மனுதாரர் நீதிமன்றத்தில் வேறு சாட்சிகள் மூலம் தனது வழக்கினை நிரூபணம் செய்ய தயாராக இருக்கிறார். எனவே, ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வசந்தராஜ் சாட்சியத்தினை நீக்கறவு செய்துவிட்டு விஜிலாகுமார் என்பவரை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வா.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு வேண்டி வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் பல்வேறு வாய்தாக்கள் கொடுக்கப்பட்டும், மேற்படியார் ஆஜராகாத நிலையில் வா.சா.2 ன் சாட்சியத்தை நீக்கம் செய்ய மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல. வா.சா.2 சாட்சியானவர், வா.சா.1 கணேசன் என்பவரின் மனைவியின் சித்தப்பா மகன் ஆவார். மேற்படியாரை இந்த எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் சந்தித்து சாட்சியம் அளிக்க கூடாது என தெரிவித்தது கிடையாது. மிரட்டியதும் கிடையாது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.08 17:24:04 +0530

மனுதாரரால் இந்த மனுவானது அசல் வழக்கை இழுத்தடித்து நாள்கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி -2 ஆக வசந்தராஜ் என்பவர் 18.07.2025 அன்று விசாரணை செய்யப்பட்டு, 13.08.2025 ல் வா.சா.2 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக கேட்புநாள் வைக்கப்பட்டுள்ளது. வா.சா.2 உபயவாதிகள் வசித்து வரும் ஊரினை சேர்ந்தவர் என்பதால் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் பிரதிவாதியால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுமே என்று அஞ்சி குறுக்கு விசாரணை சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தின் முன் ஆஜராவதற்கு பயந்து நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வருகிறார். எனவே, ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வசந்தராஜ் சாட்சியத்தினை நீக்கறவு செய்துவிட்டு விஜிலாகுமார் என்பவரை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரருக்கு வழக்கை நிருபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யபட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், அதனால் பல மனுக்கள் தாக்கல் செய்ய நேரிடும். மனு அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்த தீங்கும் ஏற்படாது. ஆகவே, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.08 17:24:14 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் ஜனவரி மாதம் 05-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.01.08 17:24:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.01.08 17:24:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.05/2025 இன்

அ.வ.எண்.39/2018

தேதி.05.01.2026